ஓய்வூதியச் சுற்றறிக்கை 10/2020

எனது இலக்கம் :-
ஓய்/சுற்றறிக்கை/2020
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2020.12.18

மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
சகல அரச மற்றும் தனியார் வங்கித் தலைவர்கள்,
பிரதான நிறைவேற்று அதிகாரிகள்.

குறைநிரப்பு புத்தாண்டு கடன் திட்டம்

சனாபதிச் செயலாளரின் 2020.12.15 ஆந் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு ஏற்ப, நத்தார் மற்றும் புத்தாண்டு மலர்வதை ஒட்டி எதிர்வரும் புத்தாண்டுக் காலத்தில் ஓய்வூதியர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் அனைத்துக் குடும்பங்களும் உள்ளடங்கும் வகையில் குறைநிரப்பு நிதி வசதியை வழங்குவதற்காக கடன் தொகையொன்று பின்வரும் வகையில் வழங்கப்படவுள்ளது.

(அ) மாதமொன்றிற்கு ரூபா. 50,000 அல்லது அதற்கு மேற்பட்ட ஓய்வூதியம் பெறுநர்களுக்கு ரூபா. 50,000 இனைக் கொண்ட கடன் தொகையும்,

(ஆ) மாதமொன்றிற்கு ரூபா. 25,000 இற்கு மேற்பட்ட ஆனால் ரூபா. 50,000 இனை விடக் குறைவான ஓய்வூதியம் பெறுநர்களுக்கு ரூபா. 25,000 இனைக் கொண்ட கடன் தொகையும்,

(இ) மாதமொன்றிற்கு ரூபா. 25,000 இற்குக் குறைவான ஓய்வூதியம் பெறுநர்களுக்கு ரூபா. 10,000 இனைக் கடன் தொகையும் வழங்கப்படவுள்ளது.

02. மேற்குறிப்பிட்ட வருமான எல்லைகளுக்குக் கட்டுப்பட்டு ஒரு ஓய்வூதியருக்கு தனது தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் படி ஒரு குறைநிரப்பு புத்தாண்டு முற்பணக் கடன் தொகை மாத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

03. ஓய்வூதியர்களினால் தமது ஓய்வூதிய அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் வங்கியின் மூலம் இக்கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் விண்ணப்பிக்க முடியும்.

04. செயற்பாட்டில் உள்ள ஓய்வூதியர் ஒருவரா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஏற்கனவே ஓய்வூதியத் திணைக்களத்தினால் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள

தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தல் வேண்டும் என்பதோடு, கடன் வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த தகவல்களை அத்தரவில் இற்றைப்படுத்தப்படல் வேண்டும்.

05. நிலவுகின்ற தொற்று நோய் அபாயம் காரணமாக முதியோர் ஓய்வூதியச் சமூகம் எந்தவொரு விதத்திலும் அசௌகரியங்களுக்கு உட்படுத்தாது மிக விரைவாக அச்சேவைகளை வழங்கும் நிகழ்வு இடம்பெறல் வேண்டும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

06. இச்சுற்றறிக்கை அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஏ.ஜகத் டீ டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் :-

1. சனாதிபதிச் செயலாளர் - தய.அறி. கொ.
2. பிரதம அமைச்சரின் செயலாளர் - தய.அறி. கொ
3. அமைச்சரவைச் செயலாளர் - தய.அறி.கொ.
4. செயலாளர், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தய.அறி.கொ.
5. செயலாளர், நிதி அமைச்சு - தய.அறி.கொ.
6. கணக்காய்வாளர் தலைமை அதிபதி - தய.அறி.கொ. மற்றும் அவ.நட.